DEPOSITION OF THE WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE COURT NO.II,

RAMANATHAPURAM

**S.T.C.No.48/2016**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Deposition of the | : | PW1 | Caste | : | |
| Name | : | சுகுமாறன் | Age | : | 54 |
| F/N | : | காசிராஜன் | Occupation | : | வியாபாரம் |
| Village | : | கேணிக்கரை | | | |
| District | : | இராமநாதபுரம் | | | |

Solemnly affirmed in accordance with the provision of oaths Act on the 29th day of May 2024.

**29.05.2024**

**(எதிரி ஆஜர்)**

**புகார்தாரர் தரப்பு குறுக்கு விசாரணையின் தொடர்ச்சி**

**1.** கடந்த 2016–ம் ஆண்டு என்ன தொழில் நான் செய்தேன் என்று எனது புகார்மனுவிலும், நிரூபண வாக்குமூலத்திலும் சொல்லவில்லை என்றால் சரிதான். ரூ. 7,00,000/– என்பது ஒரு பெரிய தொகை என்றால் சரிதான். அந்த தொகை எவ்வாறு எனக்கு கிடைத்தது என்று புகார்மனுவிலும், நிரூபண வாக்குமூலத்திலும் சொல்லவில்லை என்றால் சரிதான். 2016 ம் ஆண்டு நான் தொழில் எதுவும் செய்யவில்லை என்றால் சரிதான். 2016 ம் ஆண்டுக்கு முன்பு வேறு எதுவும் தொழில் செய்ததற்கான ஆவணங்கள் என்னிடம் உள்ளது என்றால் சரிதான். அதை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய தயாராக உள்ளேன் என்றால் சரிதான். மேற்படி தொழில் செய்வதற்குண்டான உரிமம் என்னிடம் இருந்தது என்றால் சரிதான். அதையும் நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய தயாராக உள்ளேன் என்றால் சரிதான்.

**2.** Commercial tax department ல் நான் கணக்கு வழக்குகளை தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். அந்த கணக்கு வழக்கு ஆவணங்களையும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய தயாராக உள்ளேன் என்றால் சரிதான். 2016 ம் ஆண்டு நான் வருமான வரி செலுத்தினேனா என்றால் செலுத்தினேன். எதிரிக்கு கடன் கொடுத்த விவரத்தை வருமான வரி கணக்கில் காட்டியுள்ளேன் என்றால் சரிதான். மேற்படி வருமான வரி கணக்கு வழக்கு ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய தயாராக உள்ளேன். புகார் மனுவிலும், நிரூபண வாக்குமூலத்திலும் எந்த தேதியில் எதிரி என்னிடம் பணம் கேட்டார் என்பது குறித்து குறிப்பிடவில்லை என்றால் சரிதான். எந்த முறையில் ரூ. 7,00,000/–த்தை எதிரியிடம் நான் கொடுத்தேன் என்பது பற்றி புகார்மனுவிலும், நிரூபண வாக்குமூலத்திலும் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். எந்த தேதியில் எதிரி பணத்தை திருப்பி தருவதாக கூறினார் என்பதை பற்றி புகார்மனுவிலும்,

நிரூபண வாக்குமூலத்திலும் குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. வாங்கிய தேதியிலிருந்து மூன்று மாதத்திற்குள் திருப்பி தருவதாக எதிரி கூறினார். எந்த தேதி என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். காசோலையை எங்கு வைத்து எதிரி என்னிடம் கொடுத்தார் என்பதை பற்றி புகார்மனுவிலும், நிரூபண வாக்குமூலத்திலும் குறிப்பிடவில்லை என்றால் சரிதான்.

3. எதிரி என்னிடம் பணம் வாங்கும்போது அவரிடமிருந்து காசோலையை வாங்கினேன். கடந்த 12.12.2015ம் தேதி எதிரியிடமிருந்து காசோலையை வாங்கினேன். பணம் கொடுக்கும்போதே எதிரி காசோலையை கொடுத்தார் என்று புகார்மனுவிலும், நிரூபண வாக்குமூலத்திலும் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். நான் பல்வேறு நபர்கள் மீது இராமநாதபுரம் நீதித்துறை நடுவர் எண்1 நீதிமன்றத்தில் காசோலை மோசடி வழக்கு தொடுத்து அவைகள் நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். நான் வட்டிக்கு பணம் கொடுத்து திருப்பி கொடுக்காததால் மேற்படி வழக்கு தாக்கல் செய்தேன் என்றால் சரியல்ல. பழக்க வழக்கத்திற்காக கொடுத்த பணத்தை திருப்பி தராததால் மேற்படி வழக்கை தாக்கல் செய்தேன். அவ்வாறு சொல்வது தவறு என்றால் சரியல்ல. நான் வட்டிக்கு பணம் கொடுக்கும் தொழில் செய்கிறேன் என்றால் சரியல்ல. நான் கடன்கொடுத்த நபர்களுக்கு வங்கி மூலமாக பணத்தை அனுப்பவில்லை என்றால் சரிதான். நான் எதிரியிடம் பணத்தை திருப்பி கேட்டதற்கு வழக்கறிஞர் அறிவிப்பை தவிர வேறு எந்த ஆவணமும் இல்லை என்றால் சரிதான்.

**(குறுக்கு விசாரணையின் தொடர்ச்சிக்காக வழக்கு ஒத்திவைக்கப்படுகிறது).**

**(ஒப்பம்/–க.பிரபாகரன்)**
**நீதித்துறை நடுவர் எண்.2,**
**இராமநாதபுரம்.**